இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஐக்கிய முஸ்லிம் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1983, ஏப்ரில் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஏப்ரில் மாதம் 29 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 50*

# 1983 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஐக்கிய முஸ்லிம் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

[1983, ஏப்ரில் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 93/80

**ஐக்கிய முஸ்லிம் கழகத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"ஐக்கிய முஸ்லிம் கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, இஸ்லாமிய நெறிகளுக்கிணங்க சிக்கனத்தை மேம்படுத்தி, கழக உறுப்பினர்களுக்குக் கடன்கள் என்ற வகையாக நிதி உதவி வழங்கும் நோக்கங்களுக்காக முஸ்லிம்களிடையே இதன்முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட ஐக்கிய முஸ்லிம் கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1983 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, ஐக்கிய முஸ்லிம் கழக (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், ஐக்கிய முஸ்லிம் கழகத்தின் உறுப்பினராக இப்போதுள்ள ஆட்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப் பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "ஐக்கிய முஸ்லிம் கழகம்" என்ற பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தலும் ஆதலும் வேண்டும். அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராகவும் வழக்குத் தொடுக்கப்படலாம். அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். ஐக்கிய முஸ்லிம் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கழகம் எப்பொதுக் குறிக்கோள்களுக்காக அமைக்கப்படுகின்றதோ அப்பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கழகத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) முஸ்லிம்களின் கல்வி, சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும், பொதுவில் முஸ்லிம் சமுதாயத்தின் உயர்ச்சிக்காகவும் முஸ்லிம்களிடையே ஒன்றுபட்டுத் திட்டமிட்ட செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்லுதலும், அத்தகைய நோக்கங்களுக்காக இலங்கை முழுவதிலும் கிளைகளைத் தாபிப்பதன் மூலமும் முன்னேற்றுவதன்மூலமும் கழகத்தின் செயல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தலும் ;

(ஆ) பொதுவில் முஸ்லிம்களிடையேயும் குறிப்பாக கழக உறுப்பினர்களிடையேயும் சிக்கனத்தையும் சேமிப்புப் பழக்கங்களையும் மேம்படுத்துதல் ;

(இ) இஸ்லாமிய நெறிகளுக்கிணங்க கழக உறுப்பினர்களுக்குக் கடன் களையும் நன்மைகளையும் வழங்குதல்;

(ஈ) இலங்கையில் சமய, இன நட்புறவை மேம்படுத்துதல்;

(உ) பொதுவாகப் பின்வரும் செயற்றுறைகளில் முஸ்லிம் சமுதாயத் தினர் முன்னேறுவதற்கான நடபடிகளை மேற்கொள்ளுதல் :—

(i) கமத்தொழில் முயற்சி;

(ii) குடிசைக் கைத்தொழில்;

(iii) வீட்டுக்கலையும், தாய்மைத்திறனும், சமூக உடனலவியலும்;

(iv) கூட்டுறவு முயற்சி;

(v) வர்த்தகம்;

(vi) உறுப்பினர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் தொழிலும் பொதுச் சேமநலனும்; அத்துடன்

(ஊ) மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றிற்கு உகந்தனவான அத்தகைய வேறு நடவடிக் கைகளில் ஈடுபடுதல்.

மத்திய சம் மேளனம்.

4. (1) பின்வருவோரைக் கொண்ட மத்திய சம்மேளனம் ஒன்று இருத் தல் வேண்டும் :—

(அ) ஒவ்வொரு கிளையினதும் தலைவர்; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு கிளையின்தும் மூன்று உறுப்பினர்கள், அவர்கள் அத் தகைய ஒவ்வொரு கிளையின்தும் பிரதிநிதியாகவிருப்பர்.

(2) மத்திய சம்மேளனமானது மதியுரைக் குழுவொன்றாகச் செயற்படு தல் வேண்டும் என்பதுடன், மத்திய பேரவையின் உறுப்பினர்களைத் தேர்ந் தெடுத்தலும் வேண்டும்.

மத்திய பேர வையினால் அலுவல்கள் கட்டுப்படுத்தப் படுதலும் முகாமை செய் யப்படுதலும்.

5. (1) கழக நிதியத்தைச் செலவழிப்பதற்கும் கழகத்தின் பெயரால் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கையாளுவதற்கும் அல்லது கை யுதிர்ப்பதற்கும் ஆன தத்துவமும் உள்ளிட்ட கழகத்தின் அலுவல்களினது கட்டுப்பாடும், முகாமையும் இச்சட்டத்திற்கும் அப்போதைக்கு வலுவி லுள்ளனவான கழக விதிகளுக்கும் அமைவாக, மத்திய பேரவையொன் றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். இம்மத்திய பேரவை பதவிதாங்கு நர்களையும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறானவர்களும் அவற்றிற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டிருத் தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான முதலாவது மத்திய பேரவை உறுப்பினர்கள் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கின்ற கழகத்தின் மத்திய பேரவை உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும். அத்துடன் கழ கத்தின் விதிகள் எப்படியிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியி லிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்கு (எச்சந்தர்ப்பத்திலும், அடுத்த மத் திய பேரவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முறையாக அமைக்கப் படுகின்ற வரையில்) தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், கழகத்தின் தேசிய தலைவர் ஜனாப் ஐ. எம். மூசின் மரிக்கார் தமது பதவியிலிருந்து முன்னமே விலகினாலொழிய, கழகத்தின் தேசியத் தலைவராகவும் மத்திய சம்மேளனத்தினதும் மத்திய பேரவையினதும் உறுப்பினர் ஒருவராகவும், அவரது வாழ்நாளின்போது தொடர்ந்திருந்து வருதல் வேண்டும்.

6. (1) ஏதேனும் கூட்டத்திலும், அதில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினருள் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குகள் கொண்டும், பின் வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அல்லது அவற்றுள் எது தொடர்பாகவும் காலத்திற்குக் காலம் விதிகளை ஆக்குதல் மத்திய பேரவைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :— கழகத்தின் விதிகள்.

(அ) கழகத்தின் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) மத்திய பேரவையினதும், மத்திய சம்மேளனத்தினதும் உறுப்பினர்களையும் கழகக் கிளைகளின் பதவிதாங்குநர்களையும் தேர்ந்தெடுத்தலும், நியமித்தலும், அகற்றுதலும், அத்துடன் அவர்களது பதவிக்காலமும் ;

(இ) மத்திய பேரவையினதும், மத்திய சம்மேளனத்தினதும், பல்வேறு உப குழுக்களினதும் அவற்றின் பதவிதாங்குநர்களினதும் முகவர்களினதும் கடமைகள் ;

(ஈ) அலுவல்களைக் கையாளுவதில் குறிப்பாக, நிதிகளைச் சேகரிப்பதிலும் செலவழிப்பதிலும் கையுதிர்ப்பதிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை ; அத்துடன்

(உ) பொதுவில் கழகத்தை முகாமைசெய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) மத்திய பேரவையினால் ஆக்கப்படும் விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதி ஒன்று ஆக்கப்படக்கூடிய அதே முறையில் திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

(3) கழக உறுப்பினர்கள் கழகத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. (1) கழகக் கிளையொன்றின் அலுவல்கள், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். இந்த நிறைவேற்றுக் குழு, கிளையின் துணைவிதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களையும் வேறு ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும். கழகத்தின் கிளைகள்.

(2) கிளையொன்றின் அலுவல்களை நிருவகிப்பதில், அதன் நிறைவேற்றுக் குழுவானது எல்லா நேரங்களிலும், மத்திய பேரவையின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(3) இவைபோன்று, அதன் பொதுக் கூட்டம் எதிலும் அல்லது விசேட கூட்டம் எதிலும் சமுகந்தந்துள்ள உறுப்பினருள் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குகள்கொண்டு, இச்சட்டத்துடனும் கழக விதிகளுடனும் ஒவ்வாதனவாகவிராத துணைவிதிகளை, அத்தகைய இவை அலுவல்களின் திறமையான முகாமைக்கென ஆக்கலாம். எவ்வாறாயினும், துணைவிதிகள் மத்திய பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன்மீது மட்டுமே வலுவுக்கு வருதல் வேண்டும். அத்தகைய துணைவிதிகள் ஆக்கப்பட்டதும், அதே போன்ற முறையிலும் அதேபோன்ற அங்கீகாரத்துடனும் திருத்தப்படலாம், அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

ஆதனம் முதலியவற்றை வைத்திருப்பதற்கும் கையாளுவதற்குமான தத்துவம்.

8. (1) அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைவாக, ஏதேனும் கொள்வனவு மூலம், வழங்கல் மூலம், நன்கொடை மூலம், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு மூலம் அல்லது வேறுவகையில் அதற்குரித்தாக்கப்படும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் கழகம் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டும். அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கழகத்தினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(2) கழகமானது, அதற்குரித்தாக்கப்படும், அதனால் கொள்ளப்படும் அல்லது வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியின்மீது ஏதேனும் கட்டிடத்தை எழுப்பலாம் அல்லது எழுப்புவிக்கலாம். அத்துடன், அப்போதைக்குக் கழகத்திற்குரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் ஆதனத்தைக் காலத்திற்குக் காலம் விற்கலாம், வழங்கலாம், உரித்துமாற்றலாம், மரணசாதனமூலம் கையளிக்கலாம், சாட்டலாம், கொடுத்துமாற்றலாம் அத்துடன் கையுதிர்க்கலாம்.

கழகத்தின் இலச்சினை.

9. கழகத்தின் இலச்சினையானது மத்திய பேரவையின் தேசியத் தலைவரினதும் அல்லது தேசியச் செயலாளர் நாயகத்தினதும் அல்லது தேசியப் பொருளாளரினதும் அத்துடன் இரு வேறு உறுப்பினர்களதும் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுதலினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கொள்கை அல்லது நெறிகள் பற்றிய பிணக்குகள் முதலியன மீதான முடிபுகள்.

10. இச்சட்டத்தில் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் எவையேனும் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, கழகத்தின் நெறிகள் சம்பந்தமான அல்லது கொள்கை சம்பந்தமான அல்லது அவை தொடர்பிலான ஏதேனும் விடயம் பற்றிய அல்லது பிரச்சினை பற்றிய ஏதேனும் பிணக்கு அல்லது ஐயம் மத்திய பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அவற்றின்மீது மத்திய பேரவையினால் செய்யப்படும் முடிவு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

குடியரசினதும் மறு பேர்களினதும் உரிமைகளைப் பேணல்.

11. இச்சட்டத்திலடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரச அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.